சுருக்கம்

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை – நாகப்பட்டினம் மாவட்டம் திருமருகல் ஊராட்சி ஒன்றியம் – திரு.வி.சேகர் என்பவரை சாலை உருளை ஓட்டுநராக பணியமர்த்தியதிற்கு பின்னேற்பு அளித்து ஆணை– வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ5) துறை**

அரசாணை (பத்தாண்டுகள்) எண்.**433** நாள் **9.7.2009.**

படிக்கப்பட்டவை

1. நாகப்பட்டின மாவட்ட ஆட்சித்தலைவரின் கடித எண் 1164/03/அ3 தணிக்கை நாள் 12.12.2003.
2. ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி ஆணையரின் கடிதம் ந.க எண் 10598/04/இ2/, நாள் 20.8.2004, 3.3. 2005 மற்றும் 12.4.2008.

------

**ஆணை:-**

நாகப்பட்டினம் மாவட்டம் திருமருகல் ஊராட்சி ஒன்றியத்தில் திரு V. சேகர் என்பவர் தினக்கூலி அடிப்படையில் 12.8.1988ல் சாலை உருளை ஓட்டுநராக நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வந்துள்ளார். அரசாணை நிலை எண். 126, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 16.4.1997–ல் உரிய அனுமதி பெற்று ஏற்கனவே விசை சாலை உருளை வாங்கி தினக்கூலி அடிப்படையில் ஓட்டுநர்களை பணியமர்த்தி இயக்கி வரும் ஏனைய ஊராட்சி ஒன்றியங்களுள் போதிய நிதி வசதி உள்ளவைகளில் ரூ.975–25–1150–30–1660 என்ற ஊதிய விகிதத்தில் ஒவ்வொரு விசை சாலை உருளை ஓட்டுநர் பணியிடம் தற்காலிகமாக ஏற்படுத்த நிதித்துறையின் 404 எண்ணும், 16.6.1992 நாளும் இட்ட நிலை அரசாணையைத் தளர்த்தி அனுமதி அளித்து ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வரசாணையின் அடிப்படையில் நாகப்பட்டினம் மாவட்டம், திருமருகல் ஊராட்சி ஒன்றியத்தில் 12.8.1988 முதல் தினக்கூலி அடிப்படையில் பணியாற்றி வந்த திரு V. சேகர் ஊராட்சி ஒன்றிய நியமனக் குழு தீர்மான அடிப்படையில் 14.8.1997 முதல் ரூ.975–25–1150–30–1660 எனும் ஊதிய விகிதத்தில் சாலை உருளை ஓட்டுநராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினரால், தினக்கூலியாக பணியாற்றி வந்த இவரை அரசின் முன் அனுமதி பெறாமல் சாலை உருளை ஓட்டுநராக காலமுறை ஊதியத்தில் பணியமர்த்தியது தவறாகும் என்றும் எனவே இம்முறையற்ற நியமனத்திற்கு அரசின் பின்னேற்பு பெறப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் தணிக்கைத் தடையினை நீக்கும் பொருட்டு பார்வை 1–ல் உள்ள கடிதத்தில் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பி வைத்துள்ள செயற்குறிப்பினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் பார்வை 2ல் உள்ள 20.8.2004 நாளிட்ட கடிதத்தில் அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பியுள்ளார்.

2. நாகப்பட்டின மாவட்ட ஆட்சியர் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின் மேற்காணும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரையினை ஏற்று, நாகப்பட்டினம் மாவட்டம் திருமருகல் ஊராட்சி ஒன்றியத்தில், அரசாணை (நிலை) எண். 126, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 16.4.1997ல் வெளியிடப்பட்ட ஆணையின் அடிப்படையில் 12.8.1988 முதல் தினக்கூலி அடிப்படையில் சாலை உருளை ஓட்டுநராக பணியாற்றி வந்த திரு வி. சேகர் என்பவரை 14.8.1997 முதல் ஊதிய ஏற்றமுறையில் சாலை உருளை ஓட்டுநராக வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் தெரிவு செய்யாமல், ஊராட்சி ஒன்றிய ஆணையரால் நியமனம் செய்யப்பட்டதற்கு, தணிக்கைத்தடையினை சரி செய்யும் பொருட்டு, பின்னேற்பு வழங்கிடலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணையானது நிதித்துறையின் அ.சா. எண் 37330/RD/09,நாள் 1.7.2009 ன் மூலம் ஒப்புதல் பெறப்பட்டு வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, சென்னை 15.
மாவட்டாட்சியர், நாகப்பட்டினம்,
உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்குநர்,
சென்னை 108.

<u>நகல்</u>
நிதி (ஊ.வ(ம) ஊ)துறை, சென்னை–9.
தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத்துறை, சென்னை 9
மாண்புமிகு துணை முதல்வரின் செயலர், சென்னை 9
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை முதன்மை செயலரின் தனிச்செயலர், சென்னை 9.
இருப்புக்கோப்பு/ உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

(தே.மாரியப்பன் )

அரசு சார்புச் செயலாளர்.